நினைவில் நிறுத்தப்படுபவர்களாக...

# கவிஞர் சு. வில்வரத்தினம்

09.12.2006

ந. சுசிந்திரன்

## கவிஞர் சு. வி.
## (07. 08.1950 - 09.12.2006)

மனிதர்களைப் பற்றிச் சொல்வதற்குப் பதில் மரணத்தைப் பற்றி அடிக்கடி சொல்வதாகத்தான் கடந்து செல்லும் எங்கள் அபாக்கிய காலங்கள் கரைகின்றன. இந்தக் கவிஞனது காலங்கள் இவ்வளவு குறுகியதாக இருக்குமென்று யாரும் நினைத்திருக்கவில்லை.

அகங்களும் முகங்களும்
காற்று வழிக் கிராமம்
காலத்துயர்
நெற்றிமண்

ஆகிய கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டபின், அவரது அனைத்துக் கவிதைகளும் 'உயிர்த்தெழும் காலத்திற்காக' என்ற தலைப்பில் விடியல் பதிப்பகத்திற்கூடாக வெளியானது. அரசியல் வஞ்சிப்பும், அவலங்களும், சிறுபான்மை இனங்களின் மீதான மூர்க்கத்தனமான தாக்குதல்களும், மனித அழிவுகளும் மலிந்த கடந்த முப்பது வருட காலங்களைத்தான் இவன் போன்ற கலைஞர்கள் வாழ்ந்து கழிக்க வேண்டியிருந்தது. உயிர்த்தெழுகின்ற காலமொன்றைக் கனவு கண்டபடி, அதற்காக என்னைத் தருவதெனினும் இசைவேன் என்று எழுதி ஈழத்தின் காலத்துயரைப் பாடியபடியே மறைந்தனன் அவன்.



1975ம் ஆண்டின் நடுமாதமொன்றின் மாலை வேளை. புங்குடுதீவின் பெருங்காட்டுச் சந்தியில் சிறீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் சு. வில்வரத்தினம் அவர்களின் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. எதற்காகவென்று இப்பொழுது என் நினைவில் இல்லை. ஆனால், ஈழத்துச் சிவானந்தன் அவர்கள் அக்கூட்டத்தில் பேசியதும், ஆ.வை. லோகநாதன், வி. ரி. இளங்கோவன் போன்றோருடன் நானும் கலந்து கொண்ட அன்றுதான் ஒரு இலக்கியக்காரனாக சு. வில்வரத்தினத்தை அறிந்து கொண்டேன். பின்னர் சுமார் இருபது வருடங்களின் பின்னரே அவருடன் நேரில் பேசவும், பலவற்றை கலந்துபேசவும் சந்தர்ப்பம் உருவானது.

கொழும்பில் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். சோலைக்கிளியின் கவிதைகள் பற்றிய பேச்சு வந்தது. சிறிது காலம் செல்ல அவரது கவிதை ஊற்று வற்றி விடும் அபாயம் உண்டு என்று சு.வி. குறிப்பிட்டார். சு.வி. தன் மனதை எப்போதும் சோதனைக்கு உட்படுத்தியபடியே இருப்பார். கண்களில் ஒரு தீட்சண்ய ஒளியும் நேர்ப் பார்வையில் ஒரு கூரிய கதிரும் அவரிடம் இருப்பதாக நான் நினைத்துக் கொள்வேன். பழந் தமிழ் இலக்கியத்தினதும் பக்தி இலக்கியத்தினதும் மொழித் தொன்ம விழுமியக் கூறுகளை வில்வத்தின் கவிதைகளில் காணலாம்.

'எனது கவிதைகளினிடை அடையாள வரிகளாக இடைப் பெய்து நீண்ட எமது பாரம்பரிய பண்பட்டு அடையாளங்களைப் படிமப்படுத்திக் காட்ட முயல்வது எனது கவிதை ஆக்கத்தில் ஒரு பகுதி போலாகி விட்டது. இதை நான் தெரிந்தே, தேவை கருதியே,




பிரக்ஞைபூர்வமாகவே கையாள்கிறேன்"என்று தன் முன்னுரையில் அவரே குறிப்பிடுகின்றார். இதனால் தான் ஆண்டாள் பற்றிய க. கைலாசபதி அவர்களின் மதிப்பீட்டின்மீது மிகுந்த விசனம் கொண்டிருந்தார் வில்வரத்தினம்.

2000 ம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற 'தமிழ் இனி' மகாநாட்டுக்கு வில்வரத்தினம் வந்திருந்தார். மண்டப முன்றலின் மரநிழல் ஒன்றில் புதுச்சேரி எம். கண்ணன், விடியல் சிவா, வ. கீதா மற்றும் நான் எல்லோரும் சம்மணமிட்டு உட்கார்ந்து வில்வத்தின் தெளிந்த மொழி உரையாடலையும் ஈழத்தின் கவிதை இலக்கிய வெளிப்பாடுகள் பற்றிய வில்வத்தின் கருத்துக் களையும் கேட்டதன் பின்னால் கவிஞர் நிலாந்தனின் 'முல்லைக் காடே! முல்லைக் காடே! மலர்ந்து மணம் பரப்பும் முல்லைக் காடே!' என்ற பாடலைப் பாடிக் காட்டினார். வில்வம் தான் சென்ற இடமெல்லாம் தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளையும் பாடலையும் உணர்ந்து பாடித் திரிந்தார். இசை அவருக்கு இயல்பாக வசப்பட்டிருந்தது.

எஸ். வி.ராஜதுரை, சகு ஆகியோரது வீட்டில் சென்னையில் சற்றே சுகவீனத்துடன் தங்கியிருந்த போதும் 'துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா'என்ற பாரதிதாசனின் பாடல் 'மார்கழிக் குமரி கார்முகச் செல்வி ஊர் களி கொள்ள உலா வருகின்றாய்' என்ற மு. பொன்னம்பலம் அவர் களின் பாடல், மற்றும் நீலாவணனின், நிலாந் தனின் பாடல்கள் என்று இராமுழுவதும் பாடியபடியே சென்னை இரவுகளைக் கழித்தோம். பேராசிரியர் வீ. அரசு, மங்கை அவர்கள் தங்கள் வீட்டில் கொடுத்த விருந்து, வி. பி. சந்தோஷம் அவர்கள், காலஞ்சென்ற இலங்கை நயினார் தலைமையில் மலையக இலக்கிய நூல் வெளியீட்டின் பின் ஈழத்தின் பேராளர்களுக்கு ஹோட்டல் Breez இல் வழங்கிய விருந்து என்று வில்வத்துடன் நான் கழித்த நாட்களை இன்று எண்ணிப் பார்க்கிறேன். புதுச் சேரியில் எம். கண்ணன் வீட்டில் அவர்களது விருந்தோம்பலை வில்வரத்தினம் பலமுறை என்னிடம் விதந்து விதந்து சொல்லிப் போனார்.

ஜெர்மனியின் பெர்லின் நகரத்தில் இருந்து ஐரோப்பாவின் சில நாடுகளை ஊடறுத்து நோர்வேயின் ஒஸ்லோ ஊடாக பெர்கன் என்ற மலைகளைக் கடல் கவ்வும் நகரம் வரை வில்வம், கலைச்செல்வன், அ. யேசுராசா, இன்பா ஆகியோருடன் பயணித்த இனிய நினைவு சோகம் பரவி நிற்கிறது.

எமது கவிஞர்களின் கவிதைகளில் வில்வரத்தி னத்திற்கு இருந்த ஈடுபாடு அபாரமானது. பாரதியின், நீலாவணனின், மு. பொன்னம்பலத்தின், சி. சிவசேக ரத்தின், பிரமிளின் மற்றும் பல தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளைப் பயணம் முழுவதும் பாடியபடியே, நகைச் சுவையில் கழிந்த அந்த நாட்களைஎண்ணத் துக்கம் கனக்கிறது. காற்றுக்கு வந்த சோகம், வேரோடி விழுதூன்றிய வாழ்வு தொலைத்து விறைத்த கட்டை யெனக் கிடக்கின்ற கிராமங்கள், பொருக்குலர்ந்த மக்களின் போக்கறியா வாழ்வின் பொறி தளங்கள் அவர்கள் உள்ளப் பொருமல்கள் என்று பாழும் மனிதப் பிறவிபடும் பாடெல்லாம் பாடிவைத்துள்ளான் வில்வம்.

அவனது கவிதைகளைப் பாடி வியக்கும் உலகம் ஒன்றைக் காணுமுன்னரே அவன் போய்விட்டான்.